# சாதாரணக் கூட்டம்

அன்புடையீர்

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் வருகிற 29.11.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் :01

பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரது அக்டோபர் 2024 மாதத்தின் நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1065/2020/சி1)

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 02

மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதி மன்றம்,S.S.நந்தகுமார் மற்றும் சரஸ்வதி என்பவர் பல்லடம் சார்பு நீதி மன்ற வழக்கு எண்.113/2024, IA No 1/2024 வழக்கு தொடரப்பட்டுள்ளதால் பிரதிவாதியாக ஆணையாளர் பல்லடம் நகராட்சி சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வழக்கு எதிருரை தயாரிக்கப்பட்டு வழக்கறிஞர் திரு.K.குமரவேல் B.Sc.BL வழக்கறிஞர் நகராட்சியின் சார்பாக வழக்கினை தொடர்ந்து நடத்துவதால் அவருக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.50,000/–க்கு வழங்கிடவும், இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:2384/2024/எப்1)

அலுவலக குறிப்பு :–

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 03

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வடுகபாளையம் முனியப்பன் கோவில் எதிர்புறம் உள்ள பொள்ளாச்சி சாலை மையத்தில் உள்ள உயர்மின் கோபுர விளக்கில் Timer switch, கேபிள் ஆகியவை பழுதுபட்டும் விளக்குகள் பழுதுபட்டும் உள்ளதால் அப்பகுதி முழுவதும் இருள் சூழ்ந்து போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனை உடனடியாக பழுது நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. எனவே, மேற்கண்ட உயர்மின் கோபுர விளக்கில் Timer switch மற்றும் கேபிள் ஆகியவை மாற்ற ரூ.0.30 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை திரு.மார்டன் டெக்னாலஜி, கோவை அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2773 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 04

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 மாணிக்காபுரம் சாலை அரசு மருத்துவமனை பின்புற நுழைவு வாயில் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றின் மின் மோட்டார், பைப்புகள், கேபிள் மற்றும் பேனல் போர்டு ஆகியவை முற்றிலும் பழுதுபட்டுள்ளது மற்றும் மாணிக்காபுரம் குட்டையில் உள்ள ஆழ்துளைக் கிணற்றின் மின் மோட்டார், பைப்புகள், கேபிள் மற்றும் பேனல் போர்டு ஆகியவை முற்றிலும் பழுதுபட்டு ஆழ்துளை கிணற்று மோட்டாரை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாததால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பொருட்களை புதியதாக பொருத்தி இயக்க வேண்டியுள்ளது. இதனை ரூ.4.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2774 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் : 05</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 மேற்கு பல்லடம் நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திற்குள் கழிப்பிடம் அருகில் தென்மேற்கு மூலையில் உள்ள பழைய கல்சுவர் கட்டிடத்தின் மேற்கூரை மங்களூர் ஓடு மற்றும் உத்திரங்கள் ஆகியவை முற்றிலும் பழுதுபட்டு சரிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே, இதனை அகற்றி புதியதாக மேற்கூரை அமைக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து பாதுகாப்பான வகுப்பறையாக மாற்ற வேண்டியுள்ளது. இதனை ரூ.8.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2275 /2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் : 06</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:15 கொசவம்பாளையம் ரோடு ஏ1 பர்னிச்சர் கடை அருகில் உள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்து மழைநீர் சாலையில் கடந்து செல்ல இயலாததால் மழை காலங்களில் மழைநீர் சாலையின் மேல் செல்வதனால் பாதசாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, புதியதாக சிறுபாலம் கட்ட ரூ.2.80 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2776 /2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் : 07</u>**

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 17 இன்ட்ராயல் வில்லா குடியிருப்பு தெருவில் உள்ள பழைய குடிநீர் பகிர்மான குழாயானது முற்றிலும் பழுதுபட்டு அமிழ்துள்ளதனால் குடிநீர் சீராக செல்வதில்லை. இக்குடிநீர் பகிர்மான குழாயானது பதிக்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதனால் இத்தெருவில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் சீராக கிடைப்பதில்லை. எனவே, புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க வேண்டியுள்ளது. இதனை ரூ.1.60 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2777/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் : 08</u>**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 சட்டம் 57 (7) ன் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I. வார்டு எண் 04 குமரன் வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக மின்மோட்டார், UPVC பைப் லைன், கேபிள் மற்றும் Panel Board மாற்றுதல் பணிக்கு ரூ.2,22,605/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

II. பல்லடம் நகராட்சி ஆணையாளர் அறையில் மராமத்துப் பணிகள் செய்தல் பணிக்கு ரூ.98,141/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

III. பல்லடம் நகராட்சி வார்டு எண்:16 பொள்ளாச்சி பைபாஸ் சாலையில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் Panel Board, கேபிள் புதியதாக மாற்றுதல் பணிக்கு ரூ.1,70,247/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

IV. வார்டு எண்:16 பனப்பாளையம் கோவை – திருச்சி மெயின் ரோட்டில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.2,03,186/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

V. பல்லடம் நகராட்சி கணினி வசூல் மையத்திற்கு இரண்டு Dot matrix பிரிண்டர் விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.50,000/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

VI. வார்டு எண்:18 மகாலட்சுமி அவென்யூ, ஆண்டாள் நகர் மற்றும் பொள்ளாச்சி சாலையில் புதியதாக பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.1,49,650/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

VII. பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் உரிமம் புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.2,00,000/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

VIII. பல்லடம் நகராட்சிக்குட்பட்ட திருப்பூர் சாலை மற்றும் திருச்சி சாலையில் அமைந்துள்ள சென்டர் மீடியனில் புதியதாக 31 எண்ணிக்கை 120W எல்.இ.டி.

விளக்குகள் பொருத்துதல் பணிக்கு ரூ.5,03,364/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

IX. பல்லடம் நகராட்சிக்குட்பட்ட திருப்பூர் சாலை மற்றும் திருச்சி சாலையில் அமைந்துள்ள சென்டர் மீடியன் விளக்குகளுக்கு UG கேபிள்கள் மாற்றுதல் பணிக்கு ரூ.3,14,139/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

X. வார்டு எண்:11 பெரியார் நகர், வைஸ் திருமண மண்டபம் அருகில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக 7.50 HP மின்மோட்டர் பொருத்துதல் G.I. பைப் லைன், கேபிள் மற்றும் Panel Board புதியதாக மாற்றுதல் பணிக்கு ரூ.2,35,000/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

XI. நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் மற்றும் ஆண்டாள் நகர் நுண்ணுயிர் கிடங்கிற்கு புதியதாக அரவை இயந்திரம் வாங்குதல் பணிக்கு ரூ.7,97,000/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

XII. வார்டு எண்:17 ஸ்ரீ நகர் பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக 5.00 HP மின்மோட்டர் மற்றும் Panel Board பொருத்துதல் பணிக்கு ரூ.1,12,196/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

XIII. நகராட்சி சொந்தமான 13 இலகுரக வாகனம் (LCV) மற்றும் 1 டிப்பர் லாரிக்கு GPS கருவி பொருத்துதல் மற்றும் 2 கழிவுநீர் அகற்றும் லாரிகளில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள GPS கருவிகளுக்கு ஒரு வருடத்திற்கு ரீசார்ஜ் செய்தல் பணிக்கு ரூ.48,900/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

XIV. நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு புதியதாக புல் வெட்டும் இயந்திரம் 2 விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.49,500/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

XV. பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்குகளில் 8 எண்ணிக்கை 150W LED விளக்குகள் பொருத்துதல் பணிக்கு ரூ.1,69,622/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினங்கள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 09

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 13 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் திரவ குளோரினேசன் செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சோடியம் ஹைப்போ குளோரின் லிக்விட் குளோரினேசன் செய்யும்பொழுது 4 முதல் 6 சதவிகிதம் மட்டுமே குளோரின் உள்ளது. இதனால் மழை காலங்களில் கூடுதலான PPM வருவதில்லை. எனவே, சோடியம் ஹைப்போ குளோரின் லிக்விட் குளோரினேசன் செய்வதற்கு பதிலாக தானியங்கி முறையில் வாயு வடிவ குளோரினேசன் (Automatic gas chlorination) செய்தால் 100 சதவிகிதம் குளோரினேசன் செய்ய இயலும். மேலும், இம்முறையில் ஆன்லைன் மூலம் தினசரி எவ்வளவு குளோரினேசன் செய்யப்பட்டது என்பதை கண்காணிக்கவும் முடியும். இதனால் குடிநீரில் சரியான அளவில் குளோரினேசன் கலந்து பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியும். மேலும், அண்ணாநகர், மேற்குபல்லடம் மற்றும் சி.டி.சி காலனி ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு மெயின் லைன் ஒன்றாக இருப்பதால், தனித்தனியாக குளோரினேசன் அறை அமைப்பதற்கு பதிலான பொதுவான ஒரே இடத்தில் அமைக்கலாம். எனவே, பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக குளோரினேசன் அறை அமைத்து, நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர், மேற்குபல்லடம் மற்றும் சி.டி.சி காலனி ஆகிய இடங்களில் உள்ள மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் Automatic gas chlorination 100 கிலோ Gas chlorine Gas with new cylinder 2 எண்ணிக்கை, குளோரின் பிளாண்ட், Automatic PLC பேனல் போர்டு அனைத்தும் அமைக்க ரூ.16.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2778 /2024இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 10

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 13 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் திரவ குளோரினேசன் செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சோடியம் ஹைப்போ குளோரின் லிக்விட் குளோரினேசன் செய்யும்பொழுது 4 முதல் 6 சதவிகிதம் மட்டுமே குளோரின் உள்ளது. இதனால் மழை காலங்களில் கூடுதலான PPM வருவதில்லை. எனவே, சோடியம் ஹைப்போ குளோரின் லிக்விட் குளோரினேசன் செய்வதற்கு பதிலாக தானியங்கி முறையில் வாயு வடிவ குளோரினேசன் (Automatic gas chlorination) செய்தால் 100 சதவிகிதம் குளோரினேசன் செய்ய இயலும். மேலும், இம்முறையில் ஆன்லைன் மூலம் தினசரி எவ்வளவு குளோரினேசன் செய்யப்பட்டது என்பதை கண்காணிக்கவும் முடியும். இதனால் குடிநீரில் சரியான அளவில் குளோரினேசன் கலந்து பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியும். மேலும், பி.டி.ஓ காலனி, எஸ்.ஏ.பி. நகர், என்.எஸ்.பி நகர், கல்லம்பாளையம், சேடபாளையம் மற்றும் நாரணாபுரம் ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு மெயின் லைன் ஒன்றாக இருப்பதால், தனித்தனியாக குளோரினேசன் அறை அமைப்பதற்கு பதிலான பொதுவான ஒரே இடத்தில் அமைக்கலாம். எனவே மங்கலம் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான புதியதாக கட்டப்பட்டுள்ள தரைமட்டத் தொட்டி வளாகத்தில் புதியதாக குளோரினேசன் அறை அமைத்து, பி.டி.ஓ காலனி, எஸ்.ஏ.பி. நகர், என்.எஸ்.பி நகர், கல்லம்பாளையம், சேடபாளையம் மற்றும் நாரணாபுரம் ஆகிய ஆறு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் Automatic gas chlorination 100 கிலோ Gas chlorine Gas with new cylinder 2 எண்ணிக்கை, குளோரின் பிளாண்ட், Automatic PLC பேனல் போர்டு அனைத்தும் அமைக்க ரூ.16.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 2779/2024இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 11

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான இராயர்பாளையம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் இதர பயன்பாட்டிற்காக தண்ணீர் சேகரித்து வைக்கப்படும் சின்டெக்ஸ் டேங்கின் கொள்ளளவு குறைவாக உள்ளது. பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பயன்பாட்டில் உள்ளதாலும் தண்ணீரின் தேவை அதிகமாக உள்ளது. இராயர்பாளையம் நகராட்சி நடுநிலைப் பள்ளியின் அருகில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளது. இதன் பழுதுகளை சரிசெய்து ஆழ்துளை கிணறு நீரை ஏற்றி பள்ளிக்கு விநியோகம் செய்யலாம். மேலும் பள்ளி வளாகத்தில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் பள்ளிக்கு வரும் மாணவ, மாணவிகளுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்கா வண்ணம் பேவர் கற்கள் பதிக்கலாம். மேற்கண்ட மேல்நிலைத் தொட்டி பழுதுகளை சரிசெய்யவும், பேவர் கற்கள் பதிக்கவும் ரூ.6.30 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2780/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 12

பல்லடம் நகராட்சியால் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மாதப்பூர் உரக்கிடங்கில் தூய்மை பாரத இந்தியா 2.0 2023-24 திட்டத்தின் கீழ் புதியதாக வளமீட்பு மையம்(MRF) கட்டிடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வளமீட்பு மையத்திற்கு செல்லும் சாலை மண் சாலையாக உள்ளதால் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கிய நிலையிலேயே உள்ளது. இதனால் வளமீட்பு மையத்திற்கு வாகனங்கள் செல்ல இயலாமல் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிப்படைகிறது. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, மேற்குபல்லடம் நியூ எக்ஸ்டன்சன் வீதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் அருகில் உள்ள கருங்கற்களால் ஆன ஆர்ச்சை இடித்து அப்புறப்படுத்தியதில் கருங்கற்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வளமீட்பு மையத்திற்கு இக்கருங்கற்கள் மற்றும் wet mix mecadem 20 செ.மீ. கொண்டு சாலை அமைக்கலாம். இப்பணியை ரூ.3.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.(ந.க.எண்:2781 /2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 13**

பல்லடம் நகராட்சியால் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மாதப்பூர் உரக்கிடங்கு நுழைவு வாயிலில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளது. எனவே ஆர்.சி.சி. சிமெண்ட் குழாய் பதித்து தண்ணீரை வெளியேற்றவும், நுழைவு வாயில் முதல் மெயின் சாலை வரை பேவர் பிளாக் கற்கள் பதிக்கவும் ரூ.2.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2782 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 14**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு வருகின்ற 31.01.2025 அன்று குத்தகை காலம் முடிவடைகிறது.

1. வாரச்சந்தை சுங்கம் வசூலிக்கும் உரிமம்
2. மாணிக்காபுரம் ரோடு மாட்டு இறைச்சி கடை எண்.1–க்கான உரிமம்
3. மாணிக்காபுரம் ரோடு மாட்டு இறைச்சி கடை எண்.2–க்கான உரிமம்

எனவே மேற்காணும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை உள்ளூர் தினசரி நாளிதழில் வெயியீடு செய்யவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1422/2014/அ2)

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 15**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமானஅண்ணா பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவுக் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்தை 2024–25ம் ஆண்டிற்கு ஏலம் எடுக்க எவரும் முன்வராததால் மேற்படி ஏல இனத்தினை துறை மூலம் வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டு அதன்படி வசூல் செய்ய காலை, மாலை மற்றும் இரவு ஆகிய மூன்று பிரிவாக மூன்று பணியாளர்களை வசூல் பணிகள் பாதிக்காவண்ணம் நகராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படா வகையில், மாவட்ட ஆட்சித்தடைவர் திருப்பூர்அவர்களின் செயல்முறை ஆணை ந,க.எண்.5863/2017/2பி நாள்.22.09.2017–ன்படி துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி அடிப்டையில் பணியில் அமர்த்திக் கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.228 நாள்.29.09.2023–ல் புதுப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட காலம் 31.09.2024 தேதியுடன் முடிவடைந்தது மேற்கண்ட பணியினை அக்டோபர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை தினக்கூலி அடிப்படையிலே மூன்று நபர்களை பணிபுரிய அனுமதிக்கவும் அதற்கான தோராய செலவின தொகை ரூ.90,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1665/2023/அ2)

அலுவலககுறிப்பு:–

மன்றம்அனுமதிக்கலாம்

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 16

பல்லடம் நகராட்சி வார்டு எண் 17 காளியப்பா நகர் பகுதிக்கு குடிநீர் போதுமான அழுத்தத்தில் செல்லாததினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை சரி செய்ய குமரன் நகர் முதல் காளியப்பா நகர் வரை புதியதாக 90mm PVC குடிநீர் பகீர்மான குழாய் 320 மீட்டர் நீளத்திற்கு பதிக்க வேண்டியுள்ளது. இதற்கு ரூ.1.40 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:2781 /2024/இ1)

அலுவலககுறிப்பு:–

மன்றம்அனுமதிக்கலாம்

**தீர்மாணம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 17

பல்லடம் நகராட்சியில் 2–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சேடபாளையம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மண்சாலையை கான்கிரீட் சாலையாக அமைத்து தரக் கோருதல்
2. சேடபாளையம் ஆதி திராவிடர் காலனியில் கருப்பன் வீடு முதல் விஜயகாந்த் வீடு வரை மழை நீர் வடிகால் அமைத்து தரக் கோருதல்
3. சேடபாளையம் குமரன் கார்டன் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் : 18**</u>

பல்லடம் நகராட்சியில் 3–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நாரணாபுரம் ஏடி காலனியில் ஆழ்துளை மோட்டார் சரிசெய்து தர கோருதல்
2. நாரணாபுரம் ஏடி காலனியில் மழைநீர் வடிகால் பழுது பார்த்தல் பணி செய்து தர கோருதல்
3. நாரணாபுரம் ஏடி காலனி முதல் ஓடை வரை மழைநீர் வடிகால் பழுது பார்த்தல் பணி செய்து தர கோருதல்
4. நாரணாபுரம் மேல்நிலைத் தொட்டி அருகில் கழிப்பிடம் பராமரித்தல்
5. தெற்குபாளையம் பிரிவு பூஸ்டர் மோட்டர் அறை சரி செய்து தரக் கோருதல்
6. தெற்குபாளையம் நியாய விலைக்கடை அருகில் ஆழ்துளை கிணறு அறை சரி செய்து தரக் கோருதல்
7. தெற்குபாளையம் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைத்து தரக் கோருதல்
8. சிவசக்தி நகரில் மழைநீர் வடிகால் பழுது பார்த்தல் பணி செய்து தர கோருதல்
9. தெற்குபாளையம் ஏடி காலனியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் : 19**</u>

பல்லடம் நகராட்சியில் 4–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. 4வது வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலையை சரிசெய்து தர கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் : 20**</u>

பல்லடம் நகராட்சியில் 6–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திருப்பூர் மெயின் ரோடு கிழக்கு, மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல்.
2. 3 இடங்களில் கம்பி இழுத்து தெரு விளக்கு அமைத்து தர கோருதல்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் : 21**</u>

பல்லடம் நகராட்சியில் 14–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. அரிசன காலனியில் உள்ள பொதுக்கிணற்றை தூர் வாரி இரும்பு மூடி அமைத்து தரக் கோருதல்
2. ராஜகணபதி நகர் இரண்டாவது வீதியில் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான பழுதடைந்துள்ள இரும்பு குழாயை மாற்றி தர கோருதல்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**

<u>பொருள் : 22</u>

## <u>பின்சேர்க்கை மன்ற பொருள்</u>

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் 27.11.2024 ல் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்கள் கூட்ட அறிவுரையில் ப.வடுகபாளையம் கிராமம் – நத்தம் புல எண் 528 நெ. காலையில் 48 சென்ட் நிலத்தினை ப.வடுகபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்திட நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளதால் பள்ளிக்கட்டிடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்திட தீர்மானம் நிறைவேற்றிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

ப.வடுகபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியின் எதிர்கால தேவையை கருத்தில் கொண்டும் பொதுமக்கள் நலன் கருதியும் ப.வடுகபாளையம் கிராமம் நத்தம் புல எண் 528 நெ. காலையில் 48 சென்ட் நிலத்தினை நிலமாற்றம் செய்ய ஆட்சேபனை ஏதுமில்லை என மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்: 2139 /2024/எப்1)

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**